**கிரிந்த – புஹுல்வெல்ல பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 11 (திருத்திய) ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து கிரிந்த – புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்களின் பெறுமதிகள் ரூபா 132,630 தொகை மற்றும் நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் ரூபா 676,224 தொகை மற்றும் முற்பணக் கணக்கு மீதி ரூபா 32,964 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பெற வேண்டிய ரூபா 261,975 இற்கான வாகன வாடகை வருமானம் மற்றும் ரூபா 25,724 தொகையான ஆதனக் கடன் வட்டி வருமானத்தினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) கணக்குகள் இடையே பணம் மாற்றுதலை சரிசெய்யாமையால், ரூபா 1,423,450 இற்கான பணமாற்ற மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 702,440 தொகைக்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) சேதனப் பசளை செயற்களம் நிர்மாணித்தல் தொடர்பாக நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 399,524 தொகை மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ள கூட்டுத்தொகை ரூபா 21,300,857 தொகைக்கான 15 கணக்குகள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் /

அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 5,579,473 இற்கான ஒப்பற்ற தன்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 7,637,064 தொகைக்கான நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 5,140,028 இற்கான 12 மீதிகள் உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தொகை ரூபா 324,465 தொகைக்கான கம்புறுபிடிய பிரதேச சபையின் கடன் கணக்கு 10 வருட காலம் முதல் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) முத்திரை வரி, பெறுமதி கூட்டிய வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ஆகிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 971,279 தொயைாகக் காணப்பட்ட போதிலும், இந்த மீதிகளை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 40,987,218 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக உருத்துறுதி மற்றும் உரித்தாக்கிய ஆவணங்கள் மற்றும் 2006 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் பொருத்துக்களுக்கான மீதியுடன் தொடர்புடைய அட்டவணைகள், ரூபா 1,469,306 தொகைக்கான பதவியணிக் கடன் தொடர்பான முறையான மற்றும் நாளது வரையாக்கப்பட்ட கடன் பதிவேடு ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கொழும்பில் இருக்கும் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து முத்திரைக் கட்டணம் தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 1984 நவம்பர் 24 ஆம் திகதிய 1984/19 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 8.1 இனை பிழையான முறையில் புரிந்த காரணத்தினால் சபையின் இரு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 29,655 இற்கான ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம ரூபா 3,729,662 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,528,678 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,200,984 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தில் 88 சதவீதத்தை மிகைத்து மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் மீண்டுவரும் செலவுகள் இடையுறாது அதிகரிக்கும் வேகத்தில் முன்னேறியிருந்ததுடன் அந்த நிலைமையை கட்டுப்படுத்தல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) சபையின் சுயமாக உருவாக்கும் வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டைப் போலவே முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் கணிசமான அளவு மீண்டுவரும் செலவுகள் அதிகரித்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஈ) வருமான உதவி கிடைக்காத பட்சத்தில் சுயமாக உருவாக்கி வருமானத்தின் மூலம் மீண்டுவரும் செலவுகள் அணவல் செய்வதற்கு எவ்விதத்திலும் முடியாத நிலைமை ஒன்றினைக் காட்டியது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்கான கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்து அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 5,140,028 இற்கான 12 மீதிகள் காணப்படுகின்றமையால் நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத்தன்மை நிலைமையொன்று காணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை ரூபா 659,511 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 449,961 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,109,472 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 491,994 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 617,478 தொகை அளவான உயர்ந்த நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை ரூபா 129,968 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 12,482 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடல் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 11,724 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 130,726 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.4.2 வாடகை**

--------------

ஆரம்ப நிலுவை ரூபா 276,468 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 1,324,319 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,600,787 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 1,350,444 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 250,343 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.4.3 முத்திரைக் கட்டணம்**

----------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 8,271,640 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

-----------------------------------------------------

இரண்டாம் தர பதவிகளில் காணப்பட்ட 02 வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் 17 மிகைப் பதவியணியினரை முறைப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 115.8 பர்சஸ் அளவுடைய 09 காணித்துண்டுகள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் 2 ஏக்கர் 03 ரூட் 19.30 பர்சஸ் இற்கான 21 காணித் துண்டுகளை எல்லைகள் அடையாளமிட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள்**

-------------------------------------------------------------------

ரூபா 1,399,400 கிரயத்தையுடைய 03 வாகனங்கள் செயற்படுத்தப்படாமல் காணப்பட்ட போதிலும் அவற்றை பழுதுபார்த்து ஓட்டுவதற்காகப் பயன்படுத்துவதற்கு அல்லது அவ்வாறு முடியாவிடின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிருவாகம்**

----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு ரூபா 57,800,000 இற்கான 44 வேலைத்திட்டங்கள் மேற்கொள்வதற்க திட்டமிட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அவற்றில் வேலைத் திட்டமேதும் அமுல் நடத்தியிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பாதீட்டின் கீழ் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ரூபா 5,397,692 தொகைக்கான 07 நிர்மாண வேலைத் திட்டங்கள் பல்வேறு நிதியேற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.4 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக சபையினால் 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு இறுதி வரை ரூபா 12,086,370 தொகை செலவிடப்பட்டிருந்தது. அது தவிர சேதனப் பசளை செயற்களம் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,327,139 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆண்டின் போது சேதனப் பசளை உற்பத்திக்காக ரூபா 2,933,442 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றில் உழைத்திருந்த வருமானம் ரூபா 133,202 ஆகும்.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. 06 செலவு விடயங்களில் ரூபா 376,152 தொகைக்கான சேமிப்புக்களும், 02 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,913,111 தொகையாகக் காணப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் சபையினால் நியமனம் பெற்றிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 347,096 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்**

2009 ஜூன் 09 திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.4 வருடாந்த பண்டக் கணிப்பீடு நடத்துதல்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டின் பிரகாரம் 20 வகைகளில் பொருட் பதிவேட்டு உபகரணங்கள் 104 அலகுகளில் பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அது தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) வருமான நிருவாகம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு